# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **12.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 168/SCIC/2023</u>

திரு.S.ஞானசேகர் த/பெ.வீ.சிவனாண்டி ... மேல்முறையீட்டாளர்
காமாட்சி நகர்
அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி எதிரில்
செக்கணூரணி,
மதுரை - 625 514.

//எதிர்//

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை.
2.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 02.09.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 28.09.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 02.11.2022 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 15.11.2022 |

| | | |
|---|---|---|
| 5. | மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 13.12.2022 |
| 6. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.01.2023 |
| 7. | ஆணையத்தின் அறிவிப்பு | 27.03.2023 |
| 8. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 07.11.2024 |
| 9. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 24.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், திருமங்கலம் சார்பதிவகம், மதுரை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "மதுரை தெற்கு பதிவு மாவட்டம், திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1951/1974, 1954/1974 சொத்து விற்பனை ஆவண பதிவிற்கு பெறப்பட்ட தாய்பத்திரம் அசல் ஆவணம், அசல் பட்டா, அசல் சிட்டா, அடங்கல் பதிவேடு மற்றும் நிலவுடைமை மேம்பாட்டு பதிவுக்கு முந்தைய அ பதிவேடு / SLR பதிவேட்டினை பார்வையிட்ட பின் பத்திரப் பதிவு நடைபெற்றதா என்கிற விவரம் தகவலாக வழங்கவும்" என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. **இன்றைய (12/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் மதுரை மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் பொதுத் தகவல் அலுவராால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.க.நல்லகுமார், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருமங்கலம் மற்றும் திரு.முனிச்சாமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருமங்கலம் வட்டம் ஆகியோர் ஆஜரானார்கள். மனுதாரரின் 02/09/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் 13/12/2022 தேதியிட்டு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து மூன்று மாதத்திற்குப் பின்னர் வட்டாட்சியர், திருமங்கலத்திற்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரரின் கோரிக்கையை ஆணையம் ஏற்கிறது. எனவே, அப்போதைய (02/09/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் ஆர்.குணசேகர், மனுதாரரின் மனுவை பிரிவு 6(3)-ன்கீழ் உரிய காலவரம்பிற்குள் அனுப்பாமைக்கு பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு ஆணை கிடைத்த 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

3. **பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில் மனுதாரருக்கு 28/09/2022 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், 13/12/2022 தேதியிட்ட கடிதம் வாயிலாக இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதில் இனங்கள் 2 மற்றும் 6-க்கான தகவல்களை அளிக்க, வட்டாட்சியர், திருமங்கலம் வட்டம் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளதோடு, மற்ற இனங்களுக்கான தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், காலதாமதத்துடன் தகவல்கள் தனக்கு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர், 28/09/2022 தேதியிட்டு தகவல்களை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அக்கடிதம் 28/09/2022 அன்று அனுப்பியதற்கான அனுப்புகை முத்திரையினை ஆணையத்தின் முன் காண்பித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது.**

**4. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் 04/04/2025 தேதியிட்டு இனங்கள் 2, 6 -க்கான தகவல்களை தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருமங்கலம் வட்டம் அவர்கள் அனுப்பியதாகத் தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர், அளிக்கப்பட்ட தகவல்களை தான் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் தெரிவித்ததோடு, அவை மிகவும் காலதாமதமாக தனக்கு அளிக்கப்பட்டது எனப் புகார் தெரிவித்தார். மனுதாரரின் வாதுரையினை ஆணையம் ஏற்கிறது. எனவே, அப்போதைய (13/12/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர், திரு.L.R.ராஜன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருமங்கலம் வட்டம் அவர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன் படி ஒரு மாத காலத்திற்குள், மனுதாரருக்கு தகவல் வழங்காமைக்கு பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**5. மேலும், இனங்கள் 3,4,5 ஆகியவற்றிற்கு, அலுவலக ஆவணங்களின்படியான சரியான தகவல்களை / ஆவண நகல்களை எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, மனுதாரருக்கு அனுப்பிய சமீபத்திய தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. பொதுத் தகவல் அலுவலரால் இனம் 1-க்கு அளித்த தகவலை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 168/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை.

2.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்

3.திரு.ஆர்.குணசேகர்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்
திருமங்கலம்.

4. திரு.L.R. ராஜன்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
திருமங்கலம் வட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு.S.ஞானசேகர் த/பெ.வீ.சிவனாண்டி
காமாட்சி நகர், அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி எதிரில்
செக்கணூரணி,
மதுரை - 625 514.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28

2.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
மதுரை மாவட்டம்.

3.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC